TNNG020036582024

இயக்கவூர்திகளின் விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம் /

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

முன்னிலை. திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்.எல்.பி.,

இயக்கவூர்திகளின் விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாய நீதிபதி /

தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் தேதி புதன்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 27ம் நாள்)

எம்சிஓபி.எண். 256/2024

CNR.No.TNNG02-003658-2024

இளவர் சசிக்குமார் (வயது11)

இளவருக்காக அவரது தாயாரும்,

இயற்கை காப்பாளருமான சிவகாமி மூலம். .... மனுதாரர்.

..எதிர்..

1. குமரேசன்.

2. மேலாளர்,

HDFC ERGO ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தஞ்சாவூர். .... எதிர்மனுதாரர்கள்.

இந்த மனு இத்தீர்ப்பாயத்தின் முன்பாக இன்று 12.08.2026 இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:10 +0530

திரு. S. G. செந்தில்வேல் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. நரேஷ்குமார் மற்றும் பலர் மூலம் ஆஜராகியிருந்தபோதும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிருரை தாக்கல் செய்ய முன்னிலையாகததாலும், கடந்த 08.12.2023 ஆம் தேதி ஒருதலைபட்ச உத்தரவிற்கு உள்ளாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. V. பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்றே இத்தீர்ப்பாயம் இறுதியாக வழங்கிடும் …….

உத்தரவு

இந்த மனு கடந்த 16.06.2022 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில், சாட்டியக்குடிக்கு சென்றுவிட்டு தனது வீட்டிற்கு தனது தாயாருடன் வந்துகொண்டிருந்தபோது, இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீடாக ரூ.5,00,000/- கோரி மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் 140 மற்றும் 166ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்.

2 (1). சுமார் 11 வயதுடைய இளவர் மனுதாரர் கடந்த 16.06.2022 ஆம் தேதியன்று மாலை 05.00 மணியளவில், தனது தாயாரான சிவகாமியுடன் சாட்டியக்குடிக்கு சென்றுவிட்டு, தனது வீட்டிற்கு வருவதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:16 +0530

சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது அதே திசையில் 1ம் எதிர்மனுதாரர், அவருக்கு சொந்தமான TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஒட்டி வந்து இளவர் மனுதாரர் மீது மோதியுள்ளார். அதனால் இளவர் மனுதாரருக்கு வலது காலில் உள்காயம் மற்றும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது.

2 (2). காயமடைந்த இளவர் மனுதாரரை, உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த இளவர் மனுதாரரின் தந்தையான சதீஷ்குமார் அவரது இருசக்கர வாகனத்தின் மூலம் திருக்குவளை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கப்பட்டு, பின்பு மேல் சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு இளவர் மனுதாரர் கடந்த 16.06.2022 ஆம் தேதி முதல் 18.06.2022 ஆம் தேதிவரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார்.

2 (3). மேற்படி இளவர் மனுதாரர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்தாலும், இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் முழுமையாக குணமடையாத காரணத்தினால், நாளது தேதிவரை தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்து வருகிறார். விபத்து சமயத்தில் 6ம் வகுப்பு படித்து வந்த இளவர் மனுதாரர் இந்த விபத்து காயங்களினால், அவரது பள்ளி படிப்பானது பாழ்பட்டுள்ளது. இளவர் மனுதாரர் சரிவர படத்தினை கவனித்து படிக்க இயலாத நிலையில் உள்ளார். மேலும், இளவர் மனுதாரர் பள்ளியில் பிற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாட முடியாத நிலையில் மன

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:22 +0530

பாதிப்பிற்கும், மன அழுத்தத்திற்கும் ஆட்பட்டுள்ளார். இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் ஆகும்.

2 (4). இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இந்த விபத்திற்கு TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus என்ற இருசக்கர வாகனத்தினை விபத்து சமயத்தில் ஓட்டி வந்த அதன் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரே காரணமாவார். எனவே, மேற்படி 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற எண்.94/2022-ல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 337-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2 (5). இளவர் மனுதாரருக்கு இந்த விபத்தை ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, விபத்து சமயத்தில் காப்பீடானது அமலில் இருந்துள்ளது. மேலும், விபத்தில் காயமடைந்த இளவர் மனுதாரரது குடும்பம் மிகவும் ஏழ்மையானதால், மருத்துவச் செலவுகளுக்காக கடன்கள் வாங்கி செலவு செய்து வருவதால், இளவர் மனுதாரரின் குடும்பம் மிகுந்த பொருளாதார நெருக்கடியில் சிரமப்படுகிறார்கள். இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தினால் இளவர் மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்கள். இளவர் மனுதாரரின் தாய், தந்தை ஆகியோர் தினக்கூலியாக இருந்து வருகிறார்கள். இளவர் மனுதாரர் இம்மனுபோல், வேறு எந்த நீதிமன்றத்திலும் விபத்து இழப்பீடு கோரி மனு தாக்கல்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:28 +0530

செய்யவில்லை. மனுதாரர் இளவர் என்பதால், அவருக்காக இம்மனுவை அவரது தாயாரும், இயற்கை பாதுகாவலருமான சிவகாமி என்பவர் தாக்கல் செய்துள்ளார். எனவே, இளவர் மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட வலி, துன்பம், வருமான இழப்பு, நிரந்தர ஊனம், மருத்துவ செலவுகளுக்காக இழப்பீடாக ரூ.5,00,000/-னை (ரூபாய் ஐந்து லட்சம்) மனுதாக்கல் செய்த நாள் முதல் 12% பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ வழங்கவும், இதர பரிகாரங்கள் வழங்கவும், உத்தரவிட வேண்டி இளவர் மனுதாரருக்காக இம்மனு.

3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்.

3 (1). மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில், இந்த 2ம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர, ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் காப்பீட்டாளராக இந்த 2ம் எதிர்மனுதாரரை வழக்கில் சேர்த்ததற்கு உரிய ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் மற்றும் அங்கீகாரத்துடன் வாகனத்தை ஓட்டியுள்ளார் என்பதை இந்த 2ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார். மேலும், விபத்து சமயத்தில் மேற்படி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பொதுச் சாலையில் இயக்குவதற்கான செல்லத்தக்க தகுதிச்சான்று மற்றும் அனுமதிசான்று இருந்தது என்பதையும் இந்த 2ம் எதிர்மனுதாரர் மறுக்கின்றார். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் காப்பீட்டு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:35 +0530

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியுள்ளார். ஆகையால், மோட்டார் வாகனச் சட்டம், 1988-ன் பிரிவு 147 மற்றும் 166(3)-ன் படி, இந்த 2ம் எதிர்மனுதாரர், இழப்பீடு வழங்கவோ அல்லது வாகன உரிமையாளருக்கு இழப்பீடு வழங்கும் பொறுப்பை ஏற்கவோ கடமைப்பட்டவரல்லார். மேலும், பிரிவுகள் 166, 140 அல்லது 163A-ன் கீழும் மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்பதால், மனுதாரர் மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவுகள் 149 மற்றும் 164ன் கீழ் எந்தவித இழப்பீடும் கோர முடியாது. காவல்துறை, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின்படி முறையான மற்றும் சரியான வழக்கை பதிவு செய்யவில்லை என்பது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. மேலும், காவல்துறையும், வட்டாரப் போக்குவரத்து அலுவலரும் உரிய குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்யாமல், குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடங்கியுள்ளனர். எனவே, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காவல்துறை ஆவணங்களை அடிப்படையாகக்கொண்டு, கவனக்குறைவு அல்லது மோட்டார் வாகனச் சட்ட விதிமீறல் தொடர்பாக இம்மாண்புமிகு தீர்ப்பாயம் எந்த முடிவுக்கும் வர முடியாது. ஆகையால், காப்பீட்டு நிறுவனத்தின் மீது பொறுப்பைச் சுமத்த இயலாது.

3 (2). இந்த 2ம் எதிர்மனுதாரர் இளவர் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டதையே மறுக்கிறார். மனுதாரர் கூறியுள்ள வாகனம் மற்றும் அவருக்கு ஏற்பட்ட காயம் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தை அலட்சியமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதாலேயே விபத்து ஏற்பட்டதாக கூறப்படுவது தவறு. எப்படியிருப்பினும், மேற்படி வாகனத்தின்

ஆவணங்களை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்ற பிறகு, கூடுதல் எதிருரை தாக்கல் செய்யும் உரிமையை இந்த 2ம் எதிர்மனுதாரர் தக்க வைத்துக் கொள்கிறார். எனினும், இளவர் மனுதாரர் சாலையில் கவனக்குறைவாக நின்றுகொண்டிருந்ததாலேயே விபத்து ஏற்பட்டிருக்கலாம். விபத்து எவ்வாறு நடந்திருப்பினும், விபத்திற்கு மனுதாரரே காரணமாகவோ அல்லது அவரின் கூட்டுப்பங்களிப்பு அலட்சியமோதான் (Contributory Negligence) இருக்கும்.

3 (3). மனுதாரர் உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்றார் என்று கூறப்பட்டுள்ளது உண்மையல்ல. அதற்கு எவ்வித ஆவணங்களும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. மனுதாரருக்கு வலது காலிலும் உடலின் பல பகுதிகளிலும் காயங்கள் ஏற்பட்டதால், அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகவும், தலைச்சுற்றல் ஏற்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது பொய்யானவை. இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் அனுதாபத்தைப் பெறவும், இழப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கோரவும் மட்டுமே அவை கூறப்பட்டுள்ளன. இந்த விபத்தினால் மனுதாரருக்கு எந்தவித நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களுடன் மனுதாரர் ஒத்துழைக்காமல், சிகிச்சையை முழுமையாகப் பெறாமல் இடை நிறுத்திவிட்டார். மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்களே. அவை முழுமையாக குணமடைந்துவிட்டன. மருத்துவச் செலவுகளுக்காக கோரப்பட்ட இழப்பீடும் நிலைநிற்கத்தக்கதல்ல. அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் வட்டியுடன்

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:47 +0530

கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகமானது. மருத்துவமனைக்கு போக்குவரத்து செலவு, உதவியாளர் செலவு, கூடுதல் சத்துணவு செலவு, பொருட்கள் இழப்பு மற்றும் மருத்துவச் செலவுகள் ஆகியவற்றிற்காக கோரப்பட்டுள்ள தொகைகள், அவற்றை நிரூபிக்கும் ரசீதுகள் அல்லது பில்கள் இல்லாத காரணத்தால் ஏற்கத்தக்கதல்ல. வலி மற்றும் வேதனைக்காக கோரப்பட்டுள்ள தொகையும் அதிகமானதாகும். நிரந்தர ஊனம் மற்றும் எதிர்கால வருமான இழப்பு ஆகியவற்றிற்காக கோரப்பட்டுள்ள தொகையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. விபத்தின் காரணமாக மனுதாரருக்கு எந்தவித செயல்பாட்டு ஊனமும் ஏற்படவில்லை. ஆகையால், மனுதாரர் ஏதேனும் இழப்பீடு பெறத் தகுதியுடையவர் என இம்மாண்புமிகு நீதிமன்றம் கருதினாலும், அது வட்டியின்றி குறைந்த அளவிலான தொகையாக மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

3 (4). இம்மாண்புமிகு நீதிமன்றம் இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்கும்போது அதற்கு வட்டி வழங்கினால், வட்டித் தொகை ரூ.50,000/-ஐ தாண்டுமானால், வருமான வரிச் சட்டம், 1961-ன் பிரிவு 194A(3)(ix)-ன் படி, நிதிச் சட்டம், 2003-ன் மூலம் 01.06.2003 முதல் அமலுக்கு வந்த விதிகளின்படி, அந்த வட்டித் தொகையிலிருந்து மூலத்திலேயே வரி (TDS) பிடித்தம் செய்ய இந்த 2ம் எதிர்மனுதாரர் சட்டப்படி கடமைப்பட்டுள்ளார். 01.04.2010 முதல் அமலுக்கு வந்த பிரிவு 206AA-ன் படி, PAN எண்ணை வழங்கத் தவறினால், 20% என்ற அதிக விகிதத்தில் TDS பிடித்தம் செய்யப்படும். PAN அட்டை விவரங்கள் வழங்கப்பட்டால், அக்காலத்தில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:52 +0530

நடைமுறையில் உள்ள நிதிச் சட்டத்தின்படி பொருந்தக்கூடிய வரி விகிதமே அமல்படுத்தப்படும். எனவே, மனுதாரரிடம் PAN அட்டை விவரங்களை இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் உத்தரவின்படி சமர்ப்பிக்க அவருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் எதிர்வாதம் செய்யாமல் ஒருதலைபட்ச உத்தரவிற்கு உள்ளாகும்போது, அவருக்குள்ள எதிர் வாதங்கள் அனைத்தும், இந்த 2ம் எதிர்மனுதாரர் மேற்கொள்ள மோட்டார் வாகன சட்ட பிரிவு 170ன் படி அனுமதிக்க வேண்டும். எனவே, மனுதாரரின் மனுவை இந்த 2ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

<u>4. இம் மனுவில் தீர்வுகாண வேண்டிய பிரச்சனைகள்</u>:

4 (1). இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள விபத்தானது TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரும் மற்றும் உரிமையாளருமான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதா ?

4 (2). இளவர் மனுதாரர் இழப்பீடு பெற உரிமை உள்ளவர் எனில், அதை யார் செலுத்த வேண்டும் ?

4 (3). இளவர் மனுதாரர் இழப்பீடு பெற உரிமை உள்ளவர் எனில், அவர் பெறத்தக்க இழப்பீடு எவ்வளவு ?

5. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது. இந்த மனுவில் இளவர் மனுதாரர் தரப்பில், இளவர் மனுதாரரின் தாயாரான திருமதி. சிவகாமியை மசா.1 ஆக முன்னிலைப்படுத்தி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:22:59 +0530

விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் மசாஆ.1 முதல் மசாஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியிடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரியும் திரு. பாரதிகண்ணன் என்பவரை எசா.1 ஆக, முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் எசாஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. பிரச்சனை எண்.1க்கான தீர்வு.

6 (1). இளவர் மனுதாரர் கடந்த 16.06.2022 ஆம் தேதியன்று மாலை 05.00 மணியளவில், தனது தாயாரான சிவகாமியுடன் சாட்டியக்குடிக்கு சென்றுவிட்டு, தனது வீட்டிற்கு வருவதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது அதே திசையில் 1ம் எதிர்மனுதாரர், அவருக்கு சொந்தமான TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஒட்டி வந்து இளவர் மனுதாரர் மீது மோதியதால், இந்த விபத்து நடந்தது என மனு உறைத்த சங்கதியை ஒத்து மனுதாரரின் தாயாரான மசா.1 இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

6 (2). மனுதாரர் தரப்பில் இந்த வழக்கு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் மசாஆ.1 ஆகவும், மனுதாரருக்கு விபத்தினை ஏற்படுத்திய

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:23:05 +0530

வாகன ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் குமரேசன் நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்திய STC No.57/2023 என்ற வழக்கின் 10.02.2023 ஆம் தேதிய Diary நகல் மசாஆ.8 ஆகவும் குறியிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் பெயராகTN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகன ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் குமரேசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இளவர் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மசாஆ.3 ஆன மேற்படி இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலினிக்கையில், 1ம் எதிர்மனுதாரரே விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளராக இருந்தது புலனாகின்றது.

6 (3). இந்த வழக்கின் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், இளவர் மனுதாரர் சாலையில் கவனக்குறைவாக நின்றுகொண்டிருந்ததால், விபத்திற்கு மனுதாரரே காரணம் என்றும் மற்றும் அவரின் கூட்டுப்பங்களிப்பு அலட்சியம் (Contributory Negligence) ஓர் காரணம் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதனை உறுதிப்படுத்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட எசா.1 ஆன சாட்சியத்தின்மூலம்கூட, இந்த விபத்திற்கு இளவர் மனுதாரர்தான் காரணம் என்று சொல்லப்படவில்லை. குறைந்தபட்சம் மனுதாரர் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் கூட, மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்திற்கு மனுதாரர்தான்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:23:12 +0530

காரணம் என்றோ அல்லது அவரின் கூட்டுப்பங்களிப்பு அலட்சியம் காரணம் என்றோ எத்தகைய ஐயப்பாட்டினையும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் உருவாக்கப்படவில்லை. விபத்திற்கு காரணமாக சொல்லப்படும் 1ம் எதிர்மனுதாரர், இம்மனுவுரை சங்கதியை மறுத்தலிக்கும் வகையில் எதிருரை தாக்கல் செய்யாமல், இம்மனுவில் ஒருதலைபட்ச உத்தரவிற்கு உள்ளாகியுள்ளார். மேலும் அவரே, மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்திற்கு தான்தான் காரணம் என ஒப்புக்கொண்டு, குற்ற வழக்கில் அபராதம் செலுத்தியது, மசாஆ.8 ஆன ஆவணத்தின் மூலம் மனுதாரர் தரப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

6 (4). மேற்கண்ட சூழ்நிலையில், மனுதாரரின் தாயாரான மசா.1 இந்நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியம் மூலமும், மசாஆ.1 முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் மசாஆ.8 ஆன சான்றாவணத்தின் மூலமாகவும், இம்மனுவின் இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இந்த விபத்து TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகன ஓட்டுநரும், அதன் உரிமையாளருமான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால்தான் ஏற்பட்டுள்ளது என்று மனுதாரர் தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. எனவே, இம்மனுவின் இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இந்த விபத்து TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:23:18 +0530

ஏற்பட்டுள்ளது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை எண்.1க்கு தீர்வு காண்கிறது.

7. பிரச்சனை எண்.2க்குரிய தீர்வு

7 (1). இம்மனுவின் இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகன ஓட்டுநர் மற்றும் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று இத்தீர்ப்பாயம் பிரச்சனை 1க்கு தீர்வு கண்டுள்ளது. விபத்து சமயத்தில் 1ம் எதிர் மனுதாரருக்கு சொந்தமான TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனம், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த, மனுதாரர் தரப்பில், மசாஆ.3 ஆன TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலினிக்கையில், விபத்தில் சம்பந்தப்பட்ட TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டிய அதன் ஓட்டுநர் மற்றும் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்ததை காட்ட மோட்டார் வாகன ஆய்வின்போது, ஆய்விற்காக உட்படுத்தவில்லை என்பதும், விபத்தில் சம்பந்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரர்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:23:25 +0530

வாகனம் விபத்து சமயத்தில், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, அந்த காப்பீடானது கடந்த 05.10.2025 ஆம் தேதி வரை அமுலில் இருந்ததும் புலனாகின்றது. இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான அதன் உரிமையாளருக்கு, செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்தால் சமர்ப்பிக்கக்கோரி 2ம் எதிர்மனுதாரரால் அறிவிப்பு அனுப்பப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் அதனை சமர்ப்பிக்கவில்லை என்பது 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், எசா.1றின் சாட்சியத்தின் மூலமும், எசாஆ.3 மற்றும் 4 ஆன சான்றாவணங்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரும், அதன் உரிமையாளருமான 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில், செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை உறுதிப்படுத்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மாறாக அவர் எதிருரை தாக்கல் செய்யாமல், இம்மனுவில் ஒருதலைப்பட்ச உத்தரவிற்கு உள்ளாகியுள்ளார். எனவே, மேற்கண்ட சூழ்நிலையில், விபத்து சமயத்தில் இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட, TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை ஓட்டிய அதன் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் குமரேசனுக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கின்றது.

7 (2). **United India Insurance Co. Ltd., Vs. Manjunathan and another 2021 TN MAC 737** என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:23:31 +0530

> ***"Non Possession of valid Driving Licence - Breach of Policy condition – Liability of insurer – Order directing insurer to pay and recovery – Legality – Third party claim – Pay and Recover Principle bound to be followed in interest of innocent Third party victim – Order of Tribunal confirmed – Insurer at liberty to proceed against Owner for recovery as per dictum in Sri Nanjappan"***

என்று சொல்லியுள்ள சட்ட வழிகாட்டுதலையும், அதனைத் தொடர்ந்து, **The Branch Manager, ICICI Lombard General Insurance Co. Ltd., No.2849 /1B, Nanjikottai Road, Thanjavur Vs. Mariyapushpam and others C.M.A. (MD) No.517/2025** உள்ளிட்ட **C.M.A. (MD) Nos.213, 327, 419, 432, 442 of 2026** உள்ளிட்ட மொத்தம் 6 வழக்குகளில், **(2026 MHC 1791)** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், கடந்த 01.06.2026 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பிலும்,

> ***“"In these batch of appeals, there is a factual finding of a violation of one the the policy conditions on one or more grounds set out in Section 150(2) of the Motor Vehicles Act, 1988. Consequently, the Motor Accident Claims Tribunals (MACT) has directed the insurance companies to first pay the third party and thereafter recover the sums so paid under the award from the insured. In so far as CMA (MD) 213 of 2026 is concerned, we observe that in Sunita v United India Insurance Company, 2025 SCC Online SC 1464, the Supreme Court directed pay and recover even in the absence of a fitness certificate which constituted a breach of a policy condition.”***

என்று சொல்லியுள்ள சட்ட வழிகாட்டுதலையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மேற்கண்ட சட்ட வழிகாட்டுதல்கள்படி, விபத்தில் சம்பந்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டிய அதன் ஓட்டுநர் மற்றும் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், முதலில் இளவர் மனுதாரருக்கு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:23:37 +0530

செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையினை, மேற்படி வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும். அதன் பின்னர் அதனை அவர் 1ம் எதிர்மனுதாரரிடம் வசூலித்துக் கொள்ளலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு காண்கின்றது. எனவே, இத்தீர்ப்பாயம் இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட இவ்விபத்து காயங்களுக்காக, அவர் பெறத்தக்க இழப்பீடு எவ்வளவு ? என்று தீர்மானிக்கபோகும் இழப்பீட்டுத் தொகையை, காப்பீட்டு சட்டத்தின்படி அவர் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மூன்றாம் நபர் என்பதால், 2ம் எதிர்மனுதாரர் முதலில் இளவர் மனுதாரருக்கு செலுத்திவிட்டு, பின்னர் அதனை காப்பீட்டு நிபந்தனையை மீறிய 1ம் எதிர்மனுதாரரிடம் வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு கண்டு பிரச்சனை 2க்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கின்றது.

8. பிரச்சனை எண்.3குரிய தீர்வு.

8 (1). இந்த மனுவிலும், இளவர் மனுதாரரின் தாயார் மற்றும் காப்பாளருமான மசா.1றின் சாட்சியத்திலும், தனது மகனுக்கு வலது காலில் உள்காயம் மற்றும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மசாஆ.2 ஆன இளவர் மனுதாரரின் விபத்து பதிவேட்டு ஆவணம் மற்றும் மசாஆ.4 ஆன இளவர் மனுதாரருக்கு நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி ஆகியவற்றில் இளவர் மனுதாரரின் காயம் குறித்து சொற்பகாயம் அல்லது கொடுங்காயம் என எந்தவித

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:23:45 +0530

கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் கொடுங்காயம் என்பதை உறுதிப்படுத்த, இளவர் மனுதாரர் தரப்பில் எந்தவித மருத்துவ சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இளவர் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, மசாஆ.8 ஆன சான்றாவணத்தின் அடிப்படையில் பார்த்தோமேயென்றால்கூட, 1ம் எதிர்மனுதாரர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு, இதச பிரிவுகள் 279, 337 ஆகிய குற்றச்சாட்டுக்களுக்குத்தான் அபராதம் செலுத்தியுள்ளார். அதாவது இளவர் மனுதாரருக்கு சொற்பகாயம் ஏற்படுத்தியதாகத்தான் அவருக்கு எதிராக காவல்துறையால் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அதற்குத்தான் அவர் அபராதம் செலுத்தியுள்ளார். எனவே, இந்த விபத்தில் இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என இத்தீர்ப்பாயம் முடிவு காண்கின்றது.

8 (2). இந்நிலையில், இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயம் சொற்பகாயம் என்று முடிவு செய்துள்ள நிலையில், இளவர் மனுதாரருக்கு இந்த விபத்தினால் எவ்வளவு நஷ்ட ஈட்டுத் தொகை கிடைக்கக் கூடியது ? என்பதை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. இளவர் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள விபத்து காயங்களுக்காக ரூ.5,00,000/- நஷ்டஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதும், இளவர் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், துயரம், மருத்துவ செலவு, நிரந்தர இயலாமை, நிரந்தர ஊனம், போக்குவரத்து செலவு மற்றும் ஊட்டச்சத்து செலவு ஆகியவைகளுக்காக ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.30,000/-

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:23:52 +0530

கொடுப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இத்தீர்ப்பாயம் கருதுகிறது. எனவே, இளவர் மனுதாரருக்கு ரூ.30,000/- இழப்பீடு வழங்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை எண்.3க்கு தீர்வு காண்கிறது.

9. **முடிவாக,**

9 (1). இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

9 (2). இளவர் மனுதாரருக்கு இழப்பீடாக 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடுதாரர் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரர் ரூ.30,000/-னை, மனுதாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரையிலான காலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 7.5% பின் வட்டி மற்றும் செலவுத் தொகை சேர்த்து இரண்டு மாத காலத்திற்குள் (மனு தள்ளுபடி காலம் இருப்பின் அதை தவிர்த்து) இந்நீதிமன்ற MACT A/c. No.42824402011 IFSC Code: SBIN0000879 State Bank of India, Nagapattinam என்ற வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

9 (3). மேற்படி இழப்பீட்டுத் தொகையை, 2ம் எதிர்மனுதாரர் இளவர் மனுதாரருக்கு செலுத்திவிட்டு, அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

9 (4). மேற்படி தொகை செலுத்தப்பட்டவுடன் மனுதாரர் இளவர் என்பதால், அவர் மேஜராகும் காலம்வரை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:24:19 +0530

9 (5). இவ்வழக்கில் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.4,200/- என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.08.12 19:24:28 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி, /

தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

சாட்சிப் பட்டியல்:

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:

மசா.1. திருமதி. சிவகாமி (மனுதாரர்)

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-

1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-

எசா.1. திரு. பாரதிக்கண்ணன் - 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் உதவி மேலாளர்.

சான்றாவணப் பட்டியல்:

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

மசாஆ.1	21.06.2022	முதல் தகவல் அறிக்கை	நகல்
மசாஆ.2	16.06.2022	இளவர் மனுதாரரின் விபத்து பதிவேட்டு ஆவணம்	நகல்
மசாஆ.3	28.06.2022	TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor Plus இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை	நகல்
மசாஆ.4	18.06.2022	இளவர் மனுதாரருக்கு நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி.	அசல்
மசாஆ.5	--	இளவர் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை	நகல்
மசாஆ.6	--	மசா.1 சிவகாமியின் ஆதார் அடையாள அட்டை	நகல்
மசாஆ.7	--	இளவர் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம்	நகல்
மசாஆ.8	10.02.2023	STC 57/2023 என்ற வழக்கின் Diary	நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-

1ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

எசாஆ.1	12.10.2023	அங்கீகார கடிதம்	அசல்
எசாஆ.2	06.10.2020	TN 51 AP 0742 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor Plus இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு ஒப்பந்தம்	நகல்

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:24:36 +0530

எசாஆ.3	06.11.2024	2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் பதிவு அஞ்சலக ரசீதின் அசல்	-
எசாஆ.4	--	மேற்படி அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை	அசல்

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>:- இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.12 19:24:47 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி, /

தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

நாகப்பட்டினம்.

உத்தரவு (வரைவு / நேரிய)

எம்.சி.ஓ.பி.எண்.256/2024

நாள். 12.08.2026